

# INVOKANA® உடன் தொடங்கவும்

## INVOKANA® உணவுக் கட்டுப்பாடு மற்றும் உடற்பயிற்சியுடன் பயன்படுத்தப்படுகிறது...

### வகை 2 நீரிழிவு நோயாளிகளுக்குப் பின்வரும் காரணங்களுக்காக பயன்படுத்தப்படுகிறது:

- இரத்த சர்க்கரை அளவை மேம்படுத்த

### வகை 2 நீரிழிவு நோயுடைய இளம்வயதினருக்கு இருதய நோய் ஏற்படும் வாய்ப்பு மற்றும் பின்வரும் ஆபத்துகளைக் குறைக்க:

- இதயம் அல்லது இரத்த நாளங்கள் தொடர்பான பிரச்சனைகளினால் இறப்பதைக் குறைக்க
- உயிருக்கு ஊறு விளைவிக்காத இதய நோய்களைக் குறைக்க
- உயிருக்கு ஊறு விளைவிக்காத பக்கவாதத்தைத் தடுக்க

### வகை 2 நீரிழிவு நோய் மற்றும் சிறுநீரக நோயையுடைய இளம்வயதினருக்குப் பின்வரும் ஆபத்துகளைக் குறைக்க:

- சிறுநீரகங்கள் செயலிழந்து, டயாலிசிஸ் தேவைப்படும் போது சிறுநீரகச் செயல்பாடு மோசமாவதைத் தடுக்க
- இதயம் அல்லது இரத்த நாளங்கள் தொடர்பான பிரச்சனைகள் காரணமாக இறப்பதைத் தடுக்க

Pr Invokana®
canagliflozin tablets

# வகை 2 நீரிழிவு நோய் உடையவர்களுக்கான INVOKANA®

வகை 2 நீரிழிவுநோய் என்பது உங்கள் உடலால் போதுமான அளவிலான இன்சுலினை சுரக்க இயலாதது மற்றும்/அல்லது உங்கள் உடலால் சுரக்கப்படும் இன்சுலினை நன்றாக பயன்படுத்தாத நிலையைக் குறிப்பதாகும். இது நிகழும்போது, இரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகரிக்கிறது. இது கடுமையான பிரச்சனைகளை ஏற்படுத்தக்கூடும்.

**வகை 2 நீரிழிவு நோயாளிகள் உணவுக்கட்டுப்பாடு மற்றும் உடற்பயிற்சியுடன், இரத்த சர்க்கரை அளவின் சீர்த்தன்மையை மேம்படுத்த பின்வரும் சூழல்களில் INVOKANA® -ஐப் பயன்படுத்தலாம்:**

- metformin-ஐ எடுத்துக்கொள்ளாத நபர்கள் இதை மட்டும் எடுத்துக்கொள்ளலாம்
- metformin உடன் எடுத்துக்கொள்ளலாம்
- sulfonylurea உடன் உட்கொள்ளலாம்
- metformin மற்றும் sulfonylurea உடன் உட்கொள்ளலாம்
- metformin மற்றும் pioglitazone உடன் உட்கொள்ளலாம்
- metformin மற்றும் sitagliptin உடன் உட்கொள்ளலாம்
- இன்சுலின் எடுத்துக்கொள்ளும் போது உட்கொள்ளலாம் (metformin உடன் அல்லது அதை உட்கொள்ளாமல்)

**உங்களுக்கு வகை 2 நீரிழிவு நோய் இருந்து அத்துடன் உங்கள் இதயம் அல்லது இரத்த நாளங்கள் காரணமான உடல்நலப் பிரச்சனைகள் இருக்கும் போது (அல்லது இருந்தால்), உங்களுக்கு ஏற்படக்கூடிய ஆபத்தை குறைக்க INVOKANA® ஐ உணவுக்கட்டுப்பாடு மற்றும் உடற்பயிற்சியுடன் உட்கொள்ளலாம்:**

- தொடர்புடைய பிரச்சனைகள் காரணமாக ஏற்படும் இறப்பைத் தடுக்க
- உயிருக்கு ஊறு விளைவிக்காத மாரடைப்பைத் தடுக்க
- உயிருக்கு ஊறு விளைவிக்காத பக்கவாதத்தைத் தடுக்க

**உங்களுக்கு வகை 2 நீரிழிவு நோய் இருந்து மற்றும் அதன் காரணமாக உங்கள் சிறுநீரகங்கள் சேதமடைந்திருந்தால், உங்களுக்கு ஏற்படக்கூடிய ஆபத்தை குறைக்க பின்வரும் சூழல்களில் INVOKANA®-ஐ உணவுக்கட்டுப்பாடு மற்றும் உடற்பயிற்சியுடன் உட்கொள்ளலாம்:**

- சிறுநீரகங்கள் செயலிழந்து, டயாலிசிஸ் தேவைப்படும் போது சிறுநீரகச் செயல்பாடு மோசமாகுவதைத் தடுக்க
- இதயம் அல்லது இரத்த நாளங்கள் தொடர்பான பிரச்சனைகளினால்

# INVOKANA® உடன் உங்கள் நாளை தொடங்கவும்

## INVOKANA® -ஐ நாளைக்கு ஒருமுறை எடுக்க வேண்டும். இவ்வாறு செய்வது சிறந்தது:

- INVOKANA® ஐ நாளின் முதல் உணவிற்கு முன்பு எடுக்கவும்
- மாத்திரையைத் தண்ணீருடன் சேர்த்து முழுவதுமாக விழுங்கவும்
- ஒவ்வொரு நாளும் அதே நேரத்திலேயே அதை எடுக்க முயலவும்

INVOKANA® -ஐ உணவுடன் அல்லது உணவின்றி உட்கொள்ளலாம். வழக்கமான ஆரம்பநிலை மருந்தளவு 100 மிகி ஆகும். உங்கள் மருத்துவர் உங்கள் மருந்தளவை 300 மிகி ஆகவும் அதிகரிக்கலாம், ஆனால் உங்களுக்கு சிறுநீரக பிரச்சனை இருந்தால், உங்கள் மருந்தளவில் 100 மிகி ஆக தொடரலாம். INVOKANA® -ஐ உட்கொள்ள தொடங்குவதற்கு முன், உங்கள் சிறுநீரகங்கள் எவ்வளவு நன்கு செயல்படுகின்றன என்பதைக் காண உங்கள் மருத்துவர் உங்களை பரிசோதனை செய்வார். நீங்கள் எடுத்துக் கொண்டிருக்கும், சமீபத்தில் எடுத்த அல்லது எடுக்கவிருக்கும் பிற மருந்துகள் அல்லது பரிந்துரைக்கப்படாத தயாரிப்புகள் குறித்து மருந்துக்கடைகாரரிடம் அல்லது உங்கள் மருத்துவரிடம் தெரிவிக்கவும். INVOKANA® -ஐ பின்வரும் பிற மருந்துகளுடன் சேர்த்து உட்கொள்ளலாம்:


- Digoxin, இதய நோய்களைக் குணப்படுத்த பயன்படுத்தப்படும் மருந்து
- Furosemide அல்லது பிற சிறுநீர்பிரிப்பு மருந்துகள் (தண்ணீர் மாத்திரைகள்
- Angiotensin-converting-enzyme (ACE) இன்ஹிபிட்டர் அல்லது angiotensin receptor blocker (ARB) (உங்கள் இரத்த அழுத்தத்தைக் குறைப்பதற்கு)
- இன்சுலின் அல்லது sulfonylurea (glimepiride, gliclazide அல்லது glyburide போன்றவை)
- Carbamazepine, phenytoin அல்லது phenobarbital
- Efavirenz அல்லது ritonavir
- Rifampin
- St. John's wort




# INVOKANA® செயல்படும் விதம்

## INVOKANA® உங்கள் உடலில் இருந்து சர்க்கரையை அகற்ற உதவுகிறது

பொதுவாக, சிறுநீரகங்களால் சர்க்கரை வடிகட்டப்பட்ட பிறகு, கிட்டத்தட்ட அனைத்தும் சர்க்கரையும் இரத்தத்தினுள் **மீண்டும் உறிஞ்சப்படுகிறது** (மீண்டும் அனுப்பப்படுகிறது). INVOKANA® ஆனது சிறுநீரின் வழியே உடலிலிருந்து அதிக அளவிலான சர்க்கரையை வெளியேற்றுவதன் மூலம் உடலிற்கு அனுப்படும் சர்க்கரையின் அளவைக் குறைக்கிறது.



**குறைந்த அளவிலான சர்க்கரை** இரத்தத்திற்கு அனுப்பப்படுகிறது



**அதிக அளவிலான சர்க்கரை** சிறுநீரின் மூலம் வெளியேற்றப்படுகிறது

# INVOKANA® இன் இரண்டு பொதுவான பக்க விளைவுகளை நிர்வகிக்க உதவும் உத்திகள்

எந்த ஒரு மருந்துடனும் INVOKANA®-ஐ எடுத்துக் கொள்ளும் போது, நீங்கள் பக்க விளைவுகளை அனுபவிக்கக்கூடும். sulfonylurea அல்லது இன்சுலினுடன் இதை எடுத்துக்கொள்பவர்கள் குறைந்த இரத்த சர்க்கரை அளவை எதிர்கொள்ளக்கூடும் ("ஹைப்போகிளைசீமியா" என்றும் அழைக்கப்படுகிறது). INVOKANA®-இன் காரணமாக யோனி ஈஸ்ட் தொற்றுகள் ஏற்படும் வாய்ப்புள்ளது. இந்த பக்க விளைவுகளின் அறிகுறிகள் தென்பட்டால் உங்கள் **மருத்துவர் அல்லது மருந்துகடைகாரரிடம் கூறவும்.**

## ஈஸ்ட் தொற்றுநோயைத் தடுக்க உதவும் உதவிக்குறிப்புகள்:

- >> பருத்தி உள்ளாடைகளை அணியவும்.
- >> ஈரமான ஆடைகளான நீச்சலுடைகள் அல்லது உடற்பயிற்சி உடைகள் போன்றவற்றை விரைவில் மாற்றவும்
- .>> வெந்நீரில் குளித்தல் வெந்நீர் தொட்டிகளிலிருந்து தொலைவில் இருக்கவும்.

பிறப்புறுப்பில் துர்நாற்றம், பிறப்புறுப்பில் வெள்ளை அல்லது மஞ்சள் நிறத்தில் திரவப்பொருள் வெளியேற்றம் மற்றும்/அல்லது அரிப்பு போன்ற பிறப்புறுப்பு ஈஸ்ட் தொற்றின் அறிகுறிகள்.

## ஹைப்போகிளைசீமியாவை (குறைந்த சர்க்கரை அளவு) எதிர்கொண்டால் என்ன நிகழும்:

1. 1 டீஸ்பூன் தேன், 6 LifeSavers®, அல்லது 150 மிலி ஜூஸ் அல்லது குளிர்பானம் போன்ற வேகமாக செயல்படும் கார்போஹைட்ரேட் (15 கிராம்) கொண்ட பொருட்களை உட்கொள்ளலாம் அல்லது குடிக்கலாம்.
2. 15 நிமிடங்கள் காத்திருந்து உங்கள் இரத்த சர்க்கரை அளவைச் சரிபார்க்கவும். இப்போ தும் சர்க்கரை அளவு குறைவாக இருந்தால் (<4.0 mmol/L), இதை இரண்டு முறை செய்யவும்.
3. உங்கள் இரத்த சர்க்கரை அளவு >4.0 mmol/L, அடுத்த ஒரு மணி நே ரத்திற்குள் உணவு உட்கொள்ளா விட்டால், புரதம் மற்றும் மாச்சத் து (1 துண்டு சீஸ் மற்றும் 7 தின்பண்ட ங்கள் போன்றவை) அடங்கிய சிற்றுண்டியை சாப்பிடவும்.

நடுக்கம், வியர்வை, வெளிர்நிற தோல், விரைவான இதய துடிப்பு, பார்வையில் மாற்றம், பசி, தலைவலி, மனநிலையில் மாற்றம் மற்றும் கவலை அல்லது குழப்பம் ஆகியவை குறைந்த இரத்த அளவிலான சர்க்கரையின் அறிகுறிகளாகும். sulfonylurea அல்லது இன்சுலின் எடுத்துவந்தால், ஹைப்போகிளைசீமியா ஏற்படுவதற்கான அதிக வாய்ப்புள்ளது.



## INVOKANA® -இனால் ஏற்படக்கூடிய பிற பக்க விளைவுகள்

### நீங்கள் பின்வரும் பிற சாத்தியமான பக்கவிளைவுகள் ஏதையேனும் கவனித்தால், உங்கள் மருத்துவரிடம் அல்லது மருந்துக்கடைகாரரிடம் தெரிவிக்கவும்:

### பொதுவான பக்க விளைவுகள்

- ஆண்குறியில் ஈஸ்ட் தொற்று (ஆண்குறித் தலையில் சிவத்தல், வீக்கம், அரிப்பு; ஆண்குறியின் கீழ் தடித்த, கெட்டியான நீர் வெளியேற்றம்; விரும்பத்தகாத துர்நாற்றம்; ஆண்குறியை உள்ளிழுப்பதில் சிரமம்; சிறுநீர் கழிக்கும் போது அல்லது உடலுறவின் போது வலித்தல்)
- சிறுநீர் பாதை நோய்த்தொற்று ( சிறுநீர் கழிக்கும் போது  எரிவது போன்ற உணர்வு, இடுப்பெலும்பு அல்லது நடு முதுகு வலி; அடிக்கடி சிறுநீர் கழித்தல்)
- மலச்சிக்கல்
- எலும்பு முறிவு (உடைந்த எலும்புகள்)
- தோல் புண் (தோல் வெடிப்பு அல்லது இரணம், முக்கியமாக காலின் கீழ்பகுதியில்))

### அசாதாரணமான பக்க விளைவுகள்

- "பெரிஃபெரல் இஸ்கிமியா" என்று அழைக்கப்படும் தடைப்பட்ட அல்லது குறுகிய இரத்த நாளங்கள் (நடக்கும் வலி ஏற்பட்டு ஓய்வெடுக்கும் போது சரியாகக்கூடிய கால்வலி, குறைந்த இரத்த ஓட்டம், நீலநிறமான, குளிர்ந்த தோல்; குறைவான நக மற்றும் முடி வளர்ச்சி)
- நீரிழப்பு (தாகமாக, பலவீனமான அல்லது சோர்வாக உணர்தல்; குறைவான அல்லது சிறிநீர் கழிக்க இயலாமை; வேகமான இதயத் துடிப்பு
- குறைந்த இரத்த அழுத்தம் (படுக்கையிலிருந்து எழுந்து அமரும் போது அல்லது நிற்கும் போது ஏற்படக்கூடிய தலைச்சுற்றல், மயக்கம் அல்லது லேசான தலைகனத்தை உணர்தல்)
- சிறுநீரகப் பிரச்சினைகள் (குமட்டல்,  வாந்தி, வயிற்றுப்போக்கு, தசைப் பிடிப்பு, , கால்கள், கணுக்கால்கள்,  பாதம், முகம் மற்றும்/அல்லது  கைகளில் வீக்கம் ஏற்படுதல், மூச்சுத்  திணறல், சிறுநீர் கழிக்கும் இடைவெளி, நிறம் மற்றும் அளவில் மாற்றம் ஏற்படுதல்)

INVOKANA®-ஐ உட்கொள்ளும் போது தோலில் சொறி அல்லது படை ஏற்பட்டால், (அசாதாரணமான பக்க விளைவு) அதை எடுப்பதை நிறுத்தி, உங்கள் மருத்துவர் அல்லது மருந்துக்கடைக்காரரை அழைக்கவும். கணையத்தின் அழற்சி (படுக்கும் போது, குமட்டும் போது மற்றும் வாந்தியெடுக்கும் போது மோசமாகக்கூடிய கடுமையான வயிற்று வலி போன்ற அறிகுறிகளுடன் கூடிய "பேன்க்ரியாட்டீஸ்" எனப்படும் அரிய விதமான பக்க விளைவு) ஏற்படும் போது உங்கள் மருத்துவர் அல்லது மருந்துகடைகாரரை அழைக்கவும்.

இந்த பட்டியலில் சேர்க்கப்படாத ஏதேனும் பக்க விளைவுகளை எதிர்கொண்டால், அல்லது பெரிய அளவிலான அறுவை சிகிச்சை, கடுமையான நோய்தொற்று அல்லது தீவிர மருத்துவ காரணங்களுக்காக நீங்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட வேண்டுமெனில் அதனை உங்கள் மருத்துவரிடம் தெரிவிக்க வேண்டும்.

## முக்கிய பாதுகாப்புத் தகவல்

**INVOKANA® ஐ எடுக்கும் முன்பு, நீங்கள் பின்வருவனவற்றைக் கொண்டிருந்தால் உங்கள் மருத்துவர் அல்லது மருந்துக்கடைக்காரருடன் பேசவும்:**

>> நீங்கள் பின்வருபவை உள்ளிட்ட நீரழிவுநோய் கீட்டோஅசிடோசிஸை (DKA, நீரிழிவுநோயினால் ஏற்படும் ஒரு சிக்கல்) அதிகரிக்கும் வாய்ப்பினைக் கொண்டிருந்தால்:

- நீரிழப்பைக் கொண்டிருந்தால், அல்லது அதிக வாந்தி, வயிற்றுப்போக்கு அல்லது வியர்வையைக் கொண்டிருந்தால்;
- மிகவும் குறைந்த கார்போஹைட்ரேட் உணவை உட்கொண்டால்;
- சிறிது நேரம் உணவு எதுவும் உட்கொள்ளாது இருந்தால்;
- குறைவான அளவு சாப்பிட்டால், அல்லது உங்கள் உணவில் மாற்றம் ஏற்பட்டால்;
- அதிக அளவில் ஆல்கஹால் உட்கொண்டால்;
- உங்கள் கணையத்தில் பிரச்சனை இருந்தால், அல்லது இருந்திருந்தால்;
- பெரிய அளவிலான அறுவைசிகிச்சை, தீவிர நோய்தொற்று அல்லது கடுமையான மருத்துவப் பிரச்சனைகளுக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தால் அல்லது பெரிய அளவிலான அறுவைசிகிச்சை மேற்கொள்ளவிருந்தால்;
- திடீரென கடுமையான நோய் ஏற்பட்டால்;
- இன்சுலின் மருந்தளவு திடீரென குறைந்தால்;
- நீரிழிவின் காரணமாகச் சிறுநீரக நோய் ஏற்பட்டால்;
- DKA-இன் வரலாறைக் கொண்டிருந்தால்.

>> பின்வருபவை உள்ளிட்ட உறுப்புச் செயலிழப்பு அறுவை சிகிச்சை செய்யக்கூடிய வாய்ப்பினை அதிகமாகக் கொண்டிருந்தால்:

- உறுப்புச் செயலிழப்பு அறுவை சிகிச்சை வரலாறைக் கொண்டிருந்தால்;
- இதய நோயைக் கொண்டிருந்தால் அல்லது இதய நோய் ஏற்படும் ஆபத்து இருந்தால்;
- பெரும்பாலும் உங்கள் கால்களில் தடைபட்ட அல்லது குறுகிய இரத்த நாளங்கள் இருந்திருந்தால்;
- உங்கள் கால் நரம்புகளில் பாதிப்பு இருந்தால்;
- நீரழிவு நோய் கால் புண்கள் அல்லது இரணம் இருந்திருந்தால்;
- மூட்டின் கீழ்பகுதியில் நோய்தொற்று இருந்தால்;
- நீரிழப்புப் பிரச்சனையைக் கொண்டிருந்தால்.

>> குறைந்த இரத்த அழுத்தம் அல்லது "ஹைபோடென்ஷன்" என்றும் அழைக்கப்படுகிறது) மற்றும் உங்கள் உடலிலிருந்து அதிகப்படியான நீரை வெளியேற்றுதல் ("டையூரிடிக்ஸ்" அல்லது நீர் மாத்திரைகள் என அழைக்கப்படுகிறது) அல்லது உங்கள் இரத்த அழுத்தத்தைக் குறைப்பதற்கான மருந்துகளை (ஆஞ்சியோடென்சின்-மாற்று-என்சைம் தடுப்பான்கள் அல்லது ஆஞ்சியோடென்சின் ரெசெப்டர் தடுப்பான்கள் போன்றவை) எடுத்துக்கொள்கிறீர்கள் என்றால்.

>> 65 வயதைக் கடந்திருந்தால்

>> வாகனம் ஓட்டும் போது அல்லது கனரக இயந்திரங்களைப் பயன்படுத்தும் போது குறைந்த இரத்த சர்க்கரை அளவு ஏற்படுவதால் உண்டாகும் ஆபத்துகளைத் தவிர்க்க, முன்னெச்சரிக்கை நடடிக்கைகளை எடுத்தால்

>> வலிக்கு சிகிச்சையளிப்பதற்கும் வீக்கம் மற்றும் காய்ச்சலைக் குறைப்பதற்கும் பயன்படுத்தப்படும் மருந்துகளை எடுத்துக்கொள்கிறீர்கள் என்றால் (ஸ்டீரியாய்டு அல்லாத அழற்சி எதிர்ப்பு மருந்துகள் அல்லது "NSAIDகள்" என அழைக்கப்படுகிறது). இந்த மருந்துகளுடன் INVOKANA®-ஐ உட்கொள்வது சிறுநீரகப் பிரச்சினைக்கான ஆபத்தை அதிகரிக்கும்

>> கல்லீரல் பிரச்சனைகள் இருந்தால்

>> இதயநோய்களைக் கொண்டிருந்தால்

>> பால் பொருட்களில் இருக்கும் சர்க்கரை சரியாக செரிமானமாகவில்லை எனில். INVOKANA® லேக்டோஸைக் கொண்டுள்ளது

>> கர்ப்பமாக இருந்தால் அல்லது குழந்தைப் பெற திட்டமிட்டு இருந்தால். கர்ப்பமாக இருந்தால், INVOKANA®-ஐப் பயன்படுத்தக் கூடாது

>> தாய்ப்பால் ஊட்டி வந்தால். தாய்ப்பால் ஊட்டி வந்தால், INVOKANA®-ஐப் பயன்படுத்தக் கூடாது

>> அடிக்கடி சிறுநீர் பாதை நோய்த்தொற்றுக்கு உள்ளானால்

18 வயதிற்குக் குறைவான நோயாளிகளுக்கு INVOKANA®பரிந்துரைக்கப்படுவதில்லை.

INVOKANA® சிறுநீரில் சர்க்கரையின் (குளுக்கோஸ்) அளவை நேர்மறையான மாற்றத்தை உண்டாக்கும்.

INVOKANA®-ஐ எடுத்துக் கொள்வது, எலும்பு உடையக்கூடிய ஆபத்தை அதிகரிக்கிறது. எலும்பு முறிவு அபாயத்தை அதிகரிக்கக்கூடிய காரணிகளைப் பற்றி உங்கள் மருத்துவருடன் பேசவும்.

INVOKANA®-ஐ எடுக்கும் போது, உங்கள் சிறுநீரகச் செயல்பாடு, இரத்தக் கொழுப்பு அளவு (லோ டென்சிட்டி லிபோப்ரோடீன் கொலஸ்ட்ரால் அல்லது "LDL-C") உடலில் இருக்கும் சிவப்பு இரத்த அணுக்களின் அளவு (ஹெமாடோகிரிட்) மற்றும் இரத்தத்தில் பொட்டாசியத்தின் அளவு போன்றவற்றை உங்கள் மருத்துவர் சோதனை செய்யுமாறு கோரலாம்.

INVOKANA® "பெரினியத்தில் (ஆசனவாய் மற்றும் பிறப்புறுப்புகளுக்கு இடையே மற்றும் சுற்றியுள்ள பகுதி) நெக்ரோடைசிங் ஃபாஸ்சிடிஸ்" என்று அழைக்கப்படும் பிரச்சனையை ஏற்படுத்தக்கூடும். இது அரிதான ஆனால் தீவிரமான மற்றும் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய தொற்றுநோயாகும், இது ஆண்கள் மற்றும் பெண்கள் இருவரையும் பாதிக்கும். இது "ஃபோர்னியரின் குடலிறக்கம்" என்றும் அழைக்கப்படுகிறது, இதற்கு அவசர சிகிச்சை தேவை. பிறப்புறுப்புகளில் அல்லது பிறப்புறுப்புகளிலிருந்து மலக்குடல் வரை மென்மைதன்மை, சிவத்தல் அல்லது வீக்கம் ஏற்பட்டால், குறிப்பாக உங்களுக்கும் காய்ச்சல் ஏற்பட்டால் அல்லது மிகவும் பலவீனமாக, சோர்வாக அல்லது சங்கடமாக உணர்ந்தால், உடனடியாக மருத்துவ சிகிச்சை பெறவும். இவை ஃபோர்னியரின் குடலிறக்கத்தின் அறிகுறிகளாக இருக்கலாம்.

நீங்கள் ஒரு அறுவை சிகிச்சை மேற்கொள்ள இருக்கிறீர்கள் என்றால் உங்கள் அறுவை சிகிச்சைக்குப் பிறகு, அல்லது கடுமையான தொற்று, தீவிர மருத்துவ நோய் அல்லது பெரிய அறுவை சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டால், உங்கள் மருத்துவர் உங்கள் INVOKANA® ஐ நிறுத்தலாம். INVOKANA® எடுப்பதை எப்போது நிறுத்த வேண்டும், எப்போது மீண்டும் தொடங்குவது என்பது பற்றி உங்கள் மருத்துவரிடம் பேசுங்கள். உங்கள் இரத்தத்தில் அல்லது சிறுநீரில் உள்ள கீட்டோன்களை உங்கள் மருத்துவர் பரிசோதிப்பார்.

INVOKANA® தலைச்சுற்றல் மற்றும் தலைகணம் இன்றி உணர்தல் போன்றவற்றை உண்டாக்கலாம். மருந்து எவ்வாறான விளைவுகளை ஏற்படுத்தும் என்று தெரியும் வரை, வாகனம் ஓட்டவோ இயந்திரங்களைப் பயன்படுத்தவோ வேண்டாம்.

## தீவிர எச்சரிக்கைகளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும்

### DKA

- DKA என்பது தீவிரமான மற்றும் உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட வேண்டிய உயிருக்கு ஆபத்தான நிலையாகும். INVOKANA® அல்லது பிற சோடியம் குளுக்கோஸ் இணை இடமாற்றி 2 இன்ஹிபிட்டர் மூலம் சிகிச்சை அளிக்கப்பட்ட சாதாரண அல்லது அதிக இரத்த சர்க்கரை அளவை உடைய வகை 2 நீரழிவுநோய் உள்ள நோயாளிகளுக்கு DKA இருப்பதாகத் தெரியப்படுகிறது. DKA சில சமயங்களில் மரணத்திற்கு வழிவகுக்கின்றது
- நீங்கள் பின்வரும் அறிகுறிகளுள் (உங்கள் இரத்த சர்க்கரை அளவு சாதாரண நிலையில் இருந்தால் கூட) எதையேனும் கொண்டிருந்தால், **உடனடியாக மருத்துவ உதவியை நாடுவதுடன் INVOKANA®-ஐ எடுப்பதை நிறுத்தவும்:** மூச்சுவிடுவதில் சிரமம், குமட்டல், வாந்தி, வயிறு வலி, பசியின்மை, குழப்பம், மிகவும் தாகமான உணர்வு, வழக்கத்திற்கு மாறாகச் சோர்வாக உணர்தல், சுவாசிக்கும் போது இனிப்பு வாசனை ஏற்படுதல், வாயில் இனிப்பு அல்லது உலோகச் சுவை ஏற்படுவதல் அல்லது சிறுநீர் அல்லது வியர்வில் வித்தியாசமான துர்நாற்றம்
- உங்களுக்கு நீரிழிவின் காரணமாக சிறுநீரக நோய் பிரச்சனை இருந்தால், நீங்கள் INVOKANA®-ஐ எடுத்துக் கொள்ளும்போது DKA-க்கு அதிக வாய்ப்பு இருக்கலாம்
- வகை 1 நீரழிவுநோயுடைய நோயாளிகள் INVOKANA®-ஐப் பயன்படுத்தக் கூடாது
- DKA-ஐ குணப்படுத்துவதற்காகவோ அல்லது DKA வரலாறைக் கொண்டிருந்தாலோ INVOKANA®-ஐப் பயன்படுத்தக் கூடாது

### கீழ் மூட்டுச் செயலிழப்பு அறுவை சிகிச்சை

- INVOKANA® கீழ் மூட்டுச் செயலிழப்பு அறுவை சிகிச்சை செய்வதற்கான அபாயத்தினை அதிகரிக்கலாம். உறுப்பு செயலிழப்பு முக்கியமாக கால் அல்லது பாதத்தின் ஒரு பகுதியை அகற்றுவதை உள்ளடக்குகின்றன, ஆனால் முழங்காலுக்குக் கீழே அல்லது மேலே உள்ள பகுதியையும் நீக்க வேண்டியிருக்கலாம். சில நபர்களுக்கு ஒன்றிற்கு மேற்பட்ட உறுப்புச் செயலிழப்பு அறுவை சிகிச்சைக்கு உள்ளாகியுள்ளனர், சிலருக்கு உடலின் இருபகுதிகளிலும் செய்யப்பட்டுள்ளது
- உங்கள் கால் அல்லது பாதத்தில் புதிதாக வலி அல்லது எரிச்சல் போன்ற உணர்வு, இரணம், புண்கள் அல்லது நோய்தொற்றுகள் இருந்தால் உடனடியாக மருத்துவ உதவியை நாடவும். உங்களுக்கு இந்த அறிகுறிகளுள் ஏதேனும் இருந்தால், உங்கள் மருத்துவர் INVOKANA®-ஐ நிறுத்துமாறு முடிவெடுக்கலாம். முறையான கால் பராமரிப்பு மற்றும் நீரேற்ற பராமரிப்பைப் பற்றி உங்கள் மருத்துவரிடம் கலந்தாலோசிக்கவும்

# உங்கள் சோதனை முடிவுகளை அறிதல்

வழக்கமான சோதனைகள் நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதையும், ஏதேனும் வாழ்க்கை முறை அல்லது மருந்து மாற்றங்கள் தேவைப்படுமா என்பதையும் பார்க்க உதவும்.

## உங்கள் மருத்துவர் வழக்கமான இரத்த சர்க்கரை அளவு சோதனைகளை பரிந்துரைக்கலாம்:

| | |
|---|---|
| **A1c** | இது கடந்த 2 முதல் 3 மாதங்களில் உங்கள் இரத்த சர்க்கரையளவு கட்டுப்பாட்டின் சராசரி அளவீடாகும். |
| **FPG** | உங்கள் FPG (அல்லது "உண்டபின் பிளாஸ்மா குளுக்கோஸ்") உணவுக்கு முன்னரான உங்கள் இரத்த சர்க்கரை அளவாகும். |
| **PPG** | உங்கள் PPG (அல்லது "உண்ணாநிலை பிளாஸ்மா குளுக்கோஸ்") உணவுக்கு பின்னரான உங்கள் இரத்த சர்க்கரை அளவீடாகும். |

## உங்கள் தனிப்பட்ட இரத்த சர்க்கரை அளவு இலக்குகளைப் பற்றி உங்கள் மருத்துவரிடம் பேசி அவற்றை கீழே நிரப்பவும்:

| | A1c | FPG (mmol/L) | PPG (mmol/L) |
|---|---|---|---|
| நீரிழிவு நோயாளிகளுக்கு அதிகம் பரிந்துரைக்கப்பட்ட இலக்குகள்: | 7.0% அல்லது அதற்கு குறைவாக | 4.0 முதல 7.0 வரை | 5.0 முதல் 10.0 வரை (ஆனால் A1c இலக்கில் இல்லாவிட்டால் 5.0 முதல் 8.0 வரை) |
| எனது இரத்த சர்க்கரை அளவு இலக்குகள்: | | | |

## உங்கள் மருத்துவர் உங்கள் சிறுநீரக செயல்பாட்டை eGFR சோதனை மூலம் சரிபார்க்கலாம்:

>> உங்கள் eGFR (அல்லது "மதிப்பிடப்பட்ட குளோமருலர் வடிகட்டுதல் வீதம்") என்பது உங்கள் இரத்தத்திலிருந்து கழிவுகளை வடிகட்டும் பணியை உங்கள் சிறுநீரகங்கள் எவ்வளவு சிறப்பாகச் செய்கின்றன என்பதைக் குறிக்கும் இரத்த பரிசோதனை ஆகும். eGFR எவ்வளவு குறைவாக உள்ளதோ உங்கள் சிறுநீரகங்கள் அவ்வளவு மோசமாக வேலை செய்கின்றன என்று அர்த்தம்.

## உங்கள் தற்போதைய சிறுநீரக செயல்பாடு பற்றி மருத்துவரிடம் கேட்டு உங்கள் மிக சமீபத்திய eGFR சோதனை காட்டியுள்ள மதிப்பைக் கீழே குறிக்கவும்:

| eGFR வரம்பிற்கான குறிப்பு (mL/நிமி/1.73 m2) | எனது கடைசி eGFR முடிவு: ________ | இந்த முடிவு எனது சிறுநீரக செயல்பாடு இவ்வாறு செயல்படுவதாகக் காட்டுகிறது: |
|---|---|---|
| >90 | ❑ | சாதாரணம் (சிறுநீரகச் சேதத்தின் பிற அறிகுறிகளின் அடிப்படையிலான DKD நோயறிதல்) |
| 60–89 | ❑ | சிறிது குறைந்துள்ளது |
| 30–59 | ❑ | சிறிது குறைந்துள்ளது |
| 15–29 | ❑ | அதிகம் குறைந்துள்ளது |
| <15 | ❑ | இது சிறுநீரக செயலிழப்பு அல்லது "இறுதி கட்ட சிறுநீரக நோய்" என்று அழைக்கப்படுகிறது |

## பிற சோதனைகள்

உங்களுக்காக பரிந்துரைக்கப்படக்கூடிய பிற சோதனைகள் பற்றி உங்கள் மருத்துவரிடம் பேசுங்கள், அதாவது இவற்றை சரிபார்க்க:

❑ இரத்த அழுத்தம் ❑ கொழுப்பின் அளவு ❑ மற்ற: ______

## எனது சோதனை முடிவுகள்

ஒரு வருகையிலிருந்து அடுத்த வருகை வரை உங்கள் சோதனை முடிவுகளைக் கண்காணிக்க இந்த புலத்தைப் பயன்படுத்தவும். நீங்கள் எவ்வாறு இருக்கிறீர்கள் என்பதைப் பார்க்க இந்த பதிவு உங்களுக்கும் உங்கள் சுகாதார குழுவினருக்கும் பின்னர் உதவக்கூடும், எனவே தேவைப்பட்டால் உங்கள் சிகிச்சை திட்டத்தை சரிசெய்ய முடியும்.

| தேதி | A1c முடிவுகள் (%) | eGFR முடிவுகள் (mL/நிமி/1.73 m2) | பிற சோதனை முடிவுகள் |
|---|---|---|---|
| ஏப். 8 | 6.9 | 64 | BP: 120/80mmHg |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

குறிப்புகள்:

# பிணி நாள் மேலாண்மை

நீங்கள் நோய்வாய்ப்பட்டிருந்தால் மற்றும் நீரேற்றத்துடன் இருக்க போதுமான திரவப் பொருட்களைக் குடிக்க முடியாவிட்டால், நீங்கள் உங்கள் சுகாதார உதவியாளரிடம் பேசி சில மருந்துகளைத் தற்காலிகமாக நிறுத்துவதற்கான சாத்தியம் உட்பட என்ன செய்ய வேண்டும் என்று திட்டத்தை உருவாக்க வேண்டும்.[


**நீங்கள் நோய்வாய்ப்பட்டால் பயன்படுத்த உங்கள் உடல்நலப் பாதுகாப்பு உதவியாளருடன் இணைந்து பிணி நாள் மேலாண்மைத் திட்டத்தைத் தயாரிக்கவும்.**

நீங்கள் எந்த மருந்துகளை எடுத்துக்கொள்கிறீர்கள், நோய்வாய்ப்பட்டால் என்ன செய்ய வேண்டும் என்பதை பட்டியலிட இந்த புலத்தைப் பயன்படுத்தவும்:

| மருந்து | செயல் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

மேலதிக மருந்துகளைப் பயன்படுத்துவதற்கு முன்பு உங்கள் மருந்துகடைக்காரரைப் பார்த்து, மருந்துகளின் அனைத்து மாற்றங்களையும் உங்கள் உடல்நல நிபுணரிடம் ஆலோசிக்கவும்.

வகை 2 நீரிழிவு நோய் அல்லது நீரிழிவின் காரணமான சிறுநீரக நோய் பற்றிய கூடுதல் தகவலுக்கு, இதைப் பார்வையிடவும்:
**http://guidelines.diabetes.ca/patient-resources**




Pr Invokana®
canagliflozin tablets

சித்தரிக்கப்பட்ட படங்களானது மாதிரிகளை உள்ளடக்கியது, மேலும் விளக்க நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. மற்ற அனைத்து மூன்றாம் தரப்பு வணிகச்சின்னங்களும் அவற்றுடன் தொடர்புடைய உரிமையாளர்களின் வணிகச்சின்னங்களாகும்.

**Janssen Inc.** 19 Green Belt Drive | Toronto, Ontario | M3C 1L9 | **www.janssen.com/canada**

© 2021 Janssen Inc. | அனைத்து வணிகச்சின்னங்களும் உரிமத்தின் கீழ் பயன்படுத்தப்படும். | CP-205030Z

MEMBER OF INNOVATIVE MEDICINES CANADA

janssen